Damages due to floods in Vaigai River.

* 56 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the number of tank breaches which occurred in Ramanathapuram District due to floods in Vaigai river during December 1971;

(b) the amount spent by the Government for closing the breaches; and

(c) the amount of allotment requested by the District Collector?

வைகை நதி வெள்ளத்தால் பாதிப்பு

திரு. பி. திருஞானசம்பந்தம்: (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வைகை நதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கண்மாய்கள் உடைப்பு ஏற்பட்டன?

(இ) மராமத்து வேலைகளுக்கு அரசாங்கம் செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

(உ) எவ்வளவு நிதி ஒதுக்கீடு வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 191.

(இ) ரூ. 20,252.

(உ) ரூ. 5,71,800.

Loss due to heavy rain.

* 57. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(a) the number of tanks breached in Madurai, Ramanathapuram and Tirunelveli districts as a result of heavy rains in the third week of December, 1971;

1972 ஆகஸ்ட் 18]

(*b*) the relief measures undertaken by the Government in this connection ;

(*c*) the estimated loss of crops as a result of these breaches; and

(*d*) whether any compensation is awarded to the agriculturists affected ?

கனத்த மழையினால் சேதம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் மூன்றாவது வாரத் தில் பெய்த கனத்த மழை காரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உடைப்பெடுத்த ஏரிகள் எத்தனை ?

(இ) இது தொடர்பாக அரசால் எடுக்கப்பட்ட துயர் தணிப்பு நடவடிக்கைகள் யாவை ?

(உ) இந்த உடைப்புகளின் விளைவால் சேதமடைந்த பயிர் களின் மதிப்பு யாது ?

(எ) பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இழப்பீட்டுத்தொகை ஏதும் வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மதுரை--24.

இராமநாதபுரம்—319.

திருநெல்வேலி—16.

(இ) மதுரை மாவட்டத்தில் உடைப்பு ஏற்பட்ட சிறிய நீர்ப் பாசனக் கண்மாய்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களாலும், பொதுப்பணித்துறையைச் சார்ந்த கண்மாய்கள் பொதுப்பணித் துறையினராலும் மொத்தம் ரூ. 39,800 செலவில் பழுதுபார்க்கப் பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உடைப்புகள் தற்காலிக மாக அடைக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் உடைப் புகள் உடனடியாக அடைக்கப்பட்டன. மொத்தம் 974 வீடுகள் மழையினால் சேதமடைந்தன. அவைகளில் குடியிருந்து பாதிக்கப் பட்டவர்களுக்கு புதுவீடு கட்டுவதற்கு மொத்தம் ரூ. 24,510 பண

உதவியாக வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப் பட்ட உதவியின் வாயிலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும், தங்க வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

(உ) மதுரை—ரூ. 2,250.

இராமநாதபுரம்—ஏதுமில்லை.

திருநெல்வேலி—ரூ. 85,000.

(எ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர் : இராமநாதபுரம் மாவட்டத்தில்தான் முந்நூற்றுச் சொச்சம் கண்மாய்கள் உடைபட்டன என்று சொல்லப்படுகிறது. அவற்றின் கரைகளை மீண்டும் பலப்படுத்து வதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ? அவற்றை எப் போது திருத்தியமைக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்போது தற்காலிகமாக சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இது பற்றிய தகவல்கள் மேற்கொண்டு வேண்டுமானால், தனியாக வினா எழுப்பினால், தகவல்களைச் சேகரித்துக் கொடுக்கிறேன்.

Formation of Thevaram Met (Sakkulathumet) **Road**

* 58 *Q*.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the date of commencement of the work relating to the formation of Thevaram Met (Sakkulathumet) road linking Tamil Nadu and Kerala; and

(*b*) the details thereof ?

தேவாரம் மெட் (சாக்குளத்துமெட்) சாலை அமைப்பு.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு—கேரளா இணைப்பு சாலையாகிய தேவாரம் மெட் (சாக்குளத்துமெட்) சாலை அமைப்பு வேலை எப்பொழுது துவங்கும் ?

(இ) அதன் விபரம் என்ன ?